


JPL
C671

# கல்லறை மேலான காற்று

தொகுப்பு: சாள்ஸ்

PUBLIC LIBRARY
JAFFNA.

வெளியீடு:

மாணவர் இளைஞர் பொதுமன்றம்
GUYS

த. பெ. இல: 30
யாழ்ப்பாணம்.

த. பெ. இல்: 2356
சென்னை 600024

77202

## "கல்லறை மேலான காற்று"

(எட்டு ஈழத்து வளருங் கவிஞர்களின் கவிதைத் தொகுப்பு)

உரிமை : ஆக்கியோருக்கே

முதற்பதிப்பு : வைகாசி 1988

அட்டை : நிலாந்தன்

பதிப்பாளர் : மாணவர் இளைஞர் பொதுமன்றம்
GUYS

தபால் பெட்டி இலக்கம் - 30
யாழ்ப்பாணம்.

தபால் பெட்டி இலக்கம் - 2356
சென்னை 600024

894.8111

## "KALLARAI MELANA KAATTRU"

*(a Collection Poames by eight Eelam young Poets in tamil)*

**Copyright** : *Author's*

**First edition** : **May 1988**

**Cover** : *Nilanthan*

**Publishor** : *General union of youth and Studens*
*GUYS*

*Post Office Box - 30*
*Jaffna.*

*Post Office Box - 2356*
*Madras - 600024*

# முன்னுரை

கலை இலக்கியங்கள் விஞ்ஞானக் கொள்கைகளுக்கு அந்நியமானவை என்ற அபிப்பிராயமே பொதுவாகப் பலரிடையே உள்ளது. கலை இலக்கியங்களுக்கும் விஞ்ஞானக் கொள்கைகளுக்கும் இடையேயான தொடர்புகள் பற்றிச் சற்றேனும் சிந்திக்க மறுத்தமைதான் 'கலை கலைக்காகவே' என்ற வாதத்தின் உருவாக்கத்திற்குக் காரணமாகியிருக்கவேண்டும்.

'கலை இலக்கியங்கள் மனித வாழ்வுடன் இணைந்தவை' என்பதே அவை விஞ்ஞானக் கொள்கைகளிலிருந்து அந்நியமானவை அல்ல என நிறுவப்போதுமானது. சமூக இயங்கியல் பற்றிய அறிவும் உணர்வும் நன்கு வளர்த்தெடுக்கப்படின், வெறும் பொழுதுபோக்கு இலக்கியங்கள் பற்றியோ, எதிர்ப்புரட்சி இலக்கியங்கள் பற்றியோ அவை விளைவிக்கக்கூடிய தாக்கங்கள் குறித்து அதிகம் விசனிக்க வேண்டியதில்லை.

பொறி *(machine* எமக்கெல்லாம் நன்கு தெரிந்த ஒன்று. பொறிகள் பலவாயினும் எல்லாமே சக்திப் பயப்பை அடிப்படையாகக் கொண்டமைந்தவை. 'திறன்' மிக்க பொறியே அதிகம் விரும்பப்படுவது கலை இலக்கியங்களும்கூட பொறிகளைப் போன்றவைதான் அவை சமூகச் சக்திப் பயப்பை நோக்காகக் கொண்டவை. அதிக சக்தி விரயத்தைக் கொண்ட பொறிகளின் பாவனை தவிர்க்கப்படுதல் போன்று, மனித விழுமியங்களைக் கட்டிக்காக்கத் தவறும் இலக்கியங்களும்கூட காலஓட்டத்தில் நிராகரிக்கப்பட்டு விடும்

விஞ்ஞானப் பரிசோதனைகள் 'கட்டுப்பாட்டுப் பரிசோதனைகளாக' நிகழ்த்தப்படுதல் போன்று கலை இலக்கியங்களுக்கான 'கட்டுப்பாடுகள்' அவற்றின் வடிவங்களை நிர்ணயிக்கின்றன. இக்கட்டுப்பாடுகளுக்கு அமைவாகவே இலக்கியமொன்றை வளர்த்துச் செல்லவேண்டிய நிர்ப்பந்தமும் இலக்கிய கர்த்தாவுக்கு உண்டு இவ்வகையான கட்டுப்பாடுகளுக்கு மத்தியிலும், திறன்மிக்க

பொறியொன்றின் உருவாக்கம் குறித்துக் கவனஞ் செலுத்தல் போன்று, இலக்கிய கர்த்தாவும் தனது இலக்கிய ஆக்கத்தில் பயன்படுத்தும் வளங்கள், அதிக விரயமின்றி, கூடிய பயன்பாட்டைத் தம்மகத்தே கொண்டனவாய், சமூகத்தாக்கத்தை ஏற்படுத்தி சமூகச் சக்தி உருவாக்கத்திற்கு வழிகோலக்கூடியனவாய் இருத்தல் பற்றிச் சிந்தித்தாக வேண்டும்.

கவிதை என்பது மிகவும் நுணுக்கமான ஒரு பொறி, அதன் உருவ அமைப்பு எளிமையாகத் தோன்றியபோதிலும், இன்று பலரை கவிதையாக்கங்களில் ஈடுபடச் செய்துள்ளபோதிலும், கவிதையிலும் அடிகள் ஒவ்வொன்றுமே வீரியம் மிக்கனவாய் அமைதல் வேண்டும். சொல்லாட்சியும் படிமவார்ப்பும் கவிதையின் சக்திப் பயப்புக்கான மூலவளங்கள் வெறும் சொற்கோவைகளும் சொல் அடுக்குகளும் சக்திவிரயத்தையே உண்டுபண்ணுகின்றன. சொல்லாட்சியையும், படிம வார்ப்பினையும் வளர்த்துக்கொள்வதற்கு நல்ல இலக்கியங்களில் பரிச்சயம் இருக்கவேண்டியதும் அவசியமே. கவிதையின் கட்டமைப்புக்கு அமைவாக மூன் அனுபவ அறிவுத் தொகுதிகளைப் பயன்படுத்தலும் பயிற்சிக்குரியது.

வடமராட்சியில் கடந்த வருடம் 'ஒப்பரேஷன் லிபரேஷன்' போது நடந்தேறிய கொடுமைகளின் கோரங்களையும் சிதைவுகளையும் முதலாவதாண்டு நினைவு கூர்வாகக்கொண்டு வெளியாகும் இக்கவிதைத்தொகுதிக்கு முன்னுரை ஒன்று அவசியம்தானு என்பது இன்னமும் வினவாகவே என்னிடம் உள்ளது. எனினும் இத்தொகுதியிலுள்ள கவிதைகளை ஒழுதியவர்கள் இளங்கவிஞர்கள் என்பதும் இதுவரையும் இனங்காட்டப்படாதவர்கள் என்பதுமே இத்தொகுதிக்கு முன்னுரையாக ஒரு சில வரிகளை எழுதக்கிடைத்த சந்தர்ப்பம் குறித்து திருப்தியைத் தருகிறது. இத்தனை அழிப்புகளுக்கு மத்தியிலும் அதன்வேகத்துக்கு ஈடுகொடுத்துக் கொண்டு புதியனவும் புதியவர்களும் உருவாகிக் கொண்டிருக்கிறார்கள் என்பதே மகிழ்வைத் தரக்கூடியதுதானே.

முன்னுரை விமர்சனமாக அமையக்கூடாதென்பதனுல் கவிதைகள் பற்றி தனித்தனியாகவே கருத்துக்கூறுதல் பொருத்தமன்று எனினும் இக்கவிதைகள் யாவுமே, இராணுவக்கொடுமைகள் எம்மிடம் எவ்வளவு ஆழமாகப் பதிந்திருக்கின்றன என்பதை வெளிக்காட்டும் பொதுப்பண்பைத் தம்மகத்தே கொண்டுள்ளன எனக்கூறுதல் சாலப் பொருந்தும் வடமராட்சியில் நிகழ்ந்த கொடுமைகளைக் கூறும் முதலாவது தொகுப்பு என்ற வகையிலும் இதற்கு ஓர் இடமுண்டு.

*31 - 05 - 1988* *அல்வைக் கலா*

PUBLIC LIBRARY
JAFFNA.

# தொகுப்புரை

நமது வாழ்வும், மண்ணும் புரையோடிக் கொண்டிருக்கும் காலகட்டத்தில் நாம் எழுந்து வருகின்றோம். மீண்டும் மீண்டுமாய் நமது வாழ்க்கைக்கு ஒளியூட்ட முயற்சிக்கிறோம். இருட்டினில் இயல்பாய் இன்னமும் இடர்பாடடைகிறோம். திடமாக நாம் திரண்டு ஒளியினை வாழ்க்கைக்கு அளிப்போம்.

மனிதவிழுமியம் இனிமையானது. அதனில் சிறப்புற்ற அம்சம் துயரங்கள் இல்லாமலிருப்பது தான், எம்மைச்சுற்றி சொல்லமுடியாதளவு இடர்கள் ..... நாமும் அவற்றுக்குள்ளே சுழன்று பகர்ந்து கொண்டிருக்கின்றோம் ..... இவை எல்லாம் மானிட சுபீட்சத்தின் உந்துகணைகள். துயரங்களிலும் துன்பங்களிலும் தோய்ந்தெழுந்த பின்னர்தான் அவற்றின் விளைவுதெரியும். விடிவும் புரியும்...

77202

நமது மண்ணில் எங்கெங்கும் தேசிய விடுதலைப் போராட்டத்தின் நீரோட்டம் பாய்ந்து விட்டது பதிந்துவிட்டது, இதற்கு இன்னமும் முடிவாக குருதி வெள்ளம் தான் பாய்ந்து கொண்டிருக்கின்றது. இவற்றினில் வாழ்க்கையை இணைத்து மண்ணுடன் மக்களையும் செயலாற்ற தேற்றி, போற்றி வாழ்பவன்தான் நிதர்சனவாதி அவன் தான் இலக்கிய கர்த்தா எண்ணிப் பார்க்கிறோம்..... மேற்குறிப்பிட்டதனை, இன்னமும் நமது மண்ணில் துன்பங்களும் துயரங்களும் நடந்தேறும்போது அவற்றிலிருந்து விலகிச்செல்வதே அனைவர் எண்ணமுமாகவுள்ளது. அவற்றைச் சகிப்பதும், புரிவதும் இயலாமையாகவே உள்ளது. அவற்றினைத் தீர்க்கமாகத் தீர்த்தலும் இயலாமையே புரியாமையே .. .. ...

ஓராண்டு முற்றிப்போன வடமராட்சியில் நடந்தேறிய 'ஒப்பரேஸன் லிபரேஸன்' இலங்கை இராணுவத்தால் வடபகுதியில் நடாத்தப்பட்ட பல தாக்குதல்களில் மிகக் கொடூரமானது, கோரமானது, துன்பங்களின் சுவடுகள் இன்னமும் அங்கே பதிக்கப்பட்டவையாயுள்ளது. நாளைய சந்ததி இவ்வரலாறுகளைப் புரிந்து பார்க்கட்டும். இவற்றுக்குத் தீர்வுகாணும் வழிதான் நமது முயற்சி ..

''கல்லறை மேலான காற்று''... அள்ளி எரியும் நெருப்புத்துகள்களின் மீதான வருடல்களின் நெருடலை உணர்ச்சியூட்டுகின்றது வளரும்கவிஞர்களின் கவிதைத் தொகுப்பாக மிளிர்வதில் ஊக்கங் கொள்கிறோம் . ஏக்கங் கொள்கிறோம் எங்கள் மண்ணின் இலக்கியப் பதிவுகள் தொடரும் காலகட்டத்தில் வளரும் கவிஞர்களின் முன்னேட்டத்தில் தொடரப்படும் எனிவரும் காலகட்டத்தின் இலக்கிய அவாவிற்கு எமது முயற்சி வித்திட்டு விளையூட்டப்படுகின்றது. ...


இறுதியாக!

எமது இப்படைப்பு நாம் எண்ணியளவு வைராக்கியத்துடன் வெளிப்படுமா என்பது அனைவரினதும் ஒத்துழைப்பில் தங்கியுள்ளது இப்படைப்பை கொண்டுவருவதில் ஆன வலுத்திறன் வேலை அனைவரினது செயற்பாடுகளிலும் தங்கியது. எம்முடன் இப்படைப்பை பலையலாக்கச்செயற்பட்ட அனைவருக்கும் நன்றிகள் பல,

31-5-1988

தோழமையுடன்

**மாணவர் இளைஞர் பொதுமன்றம்**



★ அகிலன் எஸ். ரீ.

★ ஞானசேகர்

★ குருபரன்

★ நாடி

★ இரா. ஜனகன்

★ சடாவதணன்

★ கா. யோ. கிரிதரன்

★ தலவாக்கொல்லை சௌந்தராஜன்

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்.

*ஆகியோரின் கொடுமை மிகுந்த எங்கள்*
*மண்ணின், மக்களின் நிகழ்வுகளை*
*நினைவு கூறும்*

*கவிதைகள் .........................................*

77202



# சுவடு படிந்த சோகங்கள்

சோகத்தின் பாதைகளே
தேசத்தின் வரைபடமாய்
பரிணமித்தன...........

குருதியின் குருத்துகள்
விழியோரத்து சுவடுகளாய்
உறைந்தன...............

துயரத்தின் சிறகுகளால்
துடைக்கப்பட்ட நாட்கள்
தினமும்
பிறந்து.........
வாழ்ந்து.......
இறந்து கொண்டிருந்தன

எழுதப் படாத நிகழ்வாய்
பேசப்படாத மொழியாய்
மௌனமாய்.........
இங்கு
இழப்பொன்று நிகழ்ந்தது.........
நாம்.........
எதை இழந்தோம்.........
மண்ணை.........
மக்களை.........
காற்றை.........
கடலலையை.........
மூச்சை.........
முழுவதையும் இழந்தோம்.........

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்.

நாம் எதை இழக்கவில்லை
ஆம்.........
நாம் எதை இழக்கவில்லை.........

ஐம்பத்து எட்டு.........
சிங்களம் மட்டும்
என்றொரு சட்டம்.. .......

சத்திய சீலர்கள்
சத்தியாக் கிரகமிருந்தனர்
சாத்விகம் ஓதினர்
நடந்தது! என்ன.........
தோள் தொட்டு
தொடர்ந்து வரும்
காற்றே... ....
நீ.......— சொல்லு.........?

உடமையிழந்து.........
உடுப்பிழந்து
கண் இழந்து.........
கதி இழந்து
மண் இழந்து.........
மானமெல்லாம் இழந்து.........
தமிழன்.........
பொன்விளையும் தாய்நாடு
தேடி...... ஓடி வந்தான்.....!

தமிழா.......
உன் மனம் சிறிது......
முற்றத்து அரசமரம்.........
தெற்காலே பனைவெளிகள்.....
இரக்கமே இல்லாது
இரையும் கடலலைகள்.........
செம்பாட்டு மண் தோய்ந்த
கோவணத் துண்டுகள்
கழுவித் துவைத்து
காயப்போடுகையில்
அடித்துக்கூறிய
வார்த்தைகளை
நீ மறந்தாய்.........
மீண்டும் சென்றாய்!
நீ..........
மீண்டும் சென்றாய்!

பின்.........
என்ன..........
பின் என்ன.........
மீண்டும் மீண்டும்.........
குட்டி ஈனும் பன்றியைப்போல்
தொடர்ந்து வரும்
இனவெறிகள்.........

அகிம்சா வாதத்தில்
அரசமைப்பில்
நம்பிக்கை இழந்தனர்
நம்மவர்கள்
மாணவ பேரவை
மாநாடு விடுதலைக்கு
தோள் கொடுத்தது
புரட்சிப் பூக்கள்
துப்பாக்கிச் செடியில்
பூக்க
காலமென்னும் காற்று
கைகொட்டி நின்றது

எண்பத்து மூன்றில்
திருநெல்வேலி மண்ணில்
சிதறின சதைகள்.........

தீவு எங்கும்
ஓடின குருதி......

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்.

தாலி இருந்து
தனயனை இழந்து
எம்
தமிழ்ப் பெண்கள்
தன்னம்பிக்கை முதலாய்
தம் நாடு அடைந்தனர்

தொடர்ந்து வரும்
சோகத்தின் பயணத்தில்
இறுதியில் இணைந்தது
இனிய வடமராட்சி... ...
மீன்கள் துள்ளும்
கடலலை ஓரம்.........
பேய்கள் குவியும்!
பிணங்களை உருட்டும்.........!
பின்.........
அவற்றை.........
தவறெனச் சொல்லும்!.........
மன்னிப்பும் கேட்கும்!.........
தேடுதல் வேட்டையின் பேரில்.........
தேவைகளைத் தீர்த்துக் கொள்ளும்.........
சோதனை என்னும் பெயரில்.........
பெண்களை சுவைத்துப் பார்க்கும்.........!
சோகம் நிறைந்த
பாடங்கள் முடிவில்
மக்கள் என்றும்
வரலாறு படைப்பர்
ஆகாயம் பிளக்கும் வரை
மானுடர்கள் எழுவர்.........!
கொள்கையின் குன்றாய்
நிமிர்ந்து நிற்பர்.........!

துன்பத்தின் சுவடுகளால்
துடைக்கப்பட்ட
ஓராண்டின் முடிவில்
உறுதி எடுத்துக்கொள்வோம் ...!
நமது தலைமுறை
நிமிர்ந்து நிற்கட்டும்

அகிலன் எஸ். தி.



## சாம்பல் பூத்த தெருக்களிலிருந்து!

எல்லாவற்றையும்
இழந்தனர் நம் மக்கள்
பொன்னலரி பூத்திருந்த
புழுதித் தெருக்களில்
அந்நியர் பாதங்கள்
ஆழப் பதிந்தன.........

PUBLIC LIBRARY
JAFFNA.

எமது மண் கோரமாய்க்
கற்பழிக்கப்பட்டது
நறுமணம் வீசும்
மலர்களில் தின்றும்
தென்றல் இறங்கி வருகின்ற
ஓர் இனிய வேளை
வெட்டியும் கொத்தியும்

77202

கொடூரமாய் சிதைக்கப்பட்டது......
நிர்வாணமாய்
மாமிசத் துகள்களாய்
புதைக்கப்பட்டனர் நம் மக்கள்......
புதைபடாமலும் எரிபடாமலும்
தெருக்களில்
பிணங்களாய் நாறினர்!......

ஆம்!
எல்லாவற்றையுமே
இழந்தனர் எம்மக்கள்
உரிமையை உடைமையை
தம்வாழ் நாளை
கண்டிருந்த கனவுகளை
இளமையின் இனிய பொழுதுகளை
எல்லாவற்றையுமே.........
ஆம்!
தம் உணர்வுகளைத் தவிர!

அன்று நாம் தோற்றுப்போனோம்
எதிரிகள் தம் வெற்றியையிட்டு
மார்தட்டிக் கொள்ளட்டும்
பத்துமாதக் கர்ப்பிணியும்
பச்சிளங் குழந்தைகளும்
வரிசையில் நிறுத்தப்பட்டு
சுடப்பட்ட
பிரதாபங்களை எண்ணி
அவர்கள் மார்தட்டிக் கொள்ளட்டும்..........

வாலிபரைக் கொன்றொழித்து
ஒரு சந்ததியை
அழித்துவிட்ட சந்தோசத்தில்
அநுராதபுரத்திலும் — சிறி
ஜெயவர்த்தன புரத்திலும்
நூறு அணிவகுப்புகளை நடத்தட்டும்!......

ஆனால்
அவர்களையிட்டு
நான் கவலைப்படுகிறேன்
மனிதர்கள் தோற்பதனால்
வரலாறு தோற்பதில்லை
என்பதை
அவர்கள் அறியாததையிட்டு
நான் கவலைப்படுகிறேன்

அவர்கள் ஆணைப்படி
துப்பாக்கி தூக்கிவரும்
அப்பாவி மனிதர்களுக்காக
நான் இரக்கப்படுகிறேன்
இவர்களுக்கெதிராய்
துப்பாக்கி ஏந்திய
துர்ப்பாக்கிய நிலையை எண்ணி
நான் துயரடைகின்றேன்... .....

ஆயினும்
மக்களுக்காய்
மரணிப்பதையிட்டு
நான் மகிழ்ச்சியடைகின்றேன்
அதனால்
என் துப்பாக்கி
பறிபோவதையிட்டே
நான் வருத்தமடைகிறேன்
ஏனெனில்
என் குழந்தைக்கு
அது மிகவும் அவசியம்

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்.

சாம்பல் பூத்த தெருக்களிலிருந்து
எழுந்து வருவார்கள்
ஆயிரம் தோழர்கள்
பிணத்திலிருந்து எழும்

புழுக்களைப் போல
இறந்த ஒவ்வொரு
மனிதர்களுக்காகவும்
ஆயிரம் மனிதர்
எழுந்து வருவர்......


எதுவும் எப்போதும்
அப்படியே இருப்பதில்லை
காலம் மாறும்
வரலாறு மாறும்
மனிதனை மனிதன்
சுரண்டும் அமைப்பும்
மதமும் சாதியும்
மாதரை இழிவுசெய்
மடமையும் மாறும்
வரலாறு உலகிற்கு
செம்மலர்களைத் தூவும்

மிரள விழிக்கும்
மழலை விழிகளும்
விலங்கிடப்பட்ட கைகளும்
மொழியை இழந்த இதயமும்
என்றும் அப்படியே
இருத்தல் ஆகாது

விழிகள் நிமிரும்
தோள்கள் உயரும்
அறைகூவல் ஓங்கும்
நூறு துப்பாக்கிகள்
எங்கும் முழங்கும்......

அந்த நூறு துப்பாக்கிகள்
எம் எதிர்கால சந்ததியின்
வலிய கரங்களில்!

ஞானசேகர்



# "87 மே 26"

கொடுமையை மறவோம்!
சூரியன் கூட
கதிர்கள் ஒடிந்து
நித்திரைப் பாயில் மரணித்த
அத்தக் காலைப் பொழுதை.........

கறுப்பாய் நீண்டு
காற்றைக் கிழித்து
விண்ணின்முகடுபிரித்த
பனைகள் சாட்சியாய்
பரம்பரை ஒன்றை
கரு அழிப்பு செய்த
ரண கள நாட்களை
நாம் எப்படிமறப்போம்?......

வழமைபோல்! எல்லாம்
வழமைபோல்
சூரியன் படரும் முன்பே
காகத்தின் கரையலில்
கண்களைக் கசக்கிவிட்டு
புத்தகத்தைப் புரட்டிய படியும்

புகையிலைக் கன்றுகளை
வருடிக்கொடுத்து
மெசினை இழுத்து
தண்ணீர் சலக்க விட்டபடியும்

உறக்கமின்றியே
அங்குமிங்குமாய்
துப்பாக்கி குழலினூடு தூரத்து
எதிரியுடன் பேசிச்சிரித்து......
எல்லாம் வழமைபோல் தான்

காற்றும்
காற்றிடை இலையும்
பேசாது
வருமுன் சோகத்தை
கூறிநின்றதை
யார் அறிவார்......

அவிழ்த்து விட்டது அராஜகத்தை
அரசு!
கோடையின் இடியென
பொம்பரும் ஹெலியும் கைகோர்த்து
தாண்டவம் புரிய
நார்மீக (எச்சங்கள்) வீழ்ந்தன
எம்மேல்
என்ன இது? குரூரத்தின்
சுயரூபம்!

கோயில்கள் எங்கள்
கோட்டமாய் மாறின

எனினும்.........
சிவப்பு, வெள்ளை சுவர்
துகளின் கீழே......
பிய்த்துபோன
எங்கள் உடம்புகள்......
ஆண்டவனும் தோற்றான்
அரச பயங்கரவாதத்துக்கு!

கோரைமுளைத்த
வயல் வரம்புகளில்.........
கள்ளி எருக்களை எட்டிப்பார்த்த
கருமை ரோட்டில்.........
கறுப்பாய் நீண்டு
உறங்கப்போன பனைவெளியில்
எங்கும் என்தேசம்
எங்கும்......

அங்கறுகுருகி
அடுத்தடுத்து நடுங்கி
'பங்கர்' உயிர்களாய்
பரிணமம் பெற்று
கறுப்பாய் நீண்டு
காற்றைக் கிழித்த
பனைகள் சாட்சியாய்
வெட்டியும் கொத்தியும்
துளைத்தும் தகர்த்தும்
நெருப்பில் படுத்தி
முகங்களை இழந்து
எங்கள்
பரம்பரை
மரணித்துக் கிடக்கின்றது......

மனித இருப்புக்கு
சூச்சியம் கிடைத்த நிலையை
நாம் எப்படி மறவோம்!

மரணத்திலும்
வாழ்வோம்

கேள்விக்குறிகளாய்
ஒவ்வொரு பொழுதும்
சும்மாவந்து
கையொழுத்திட்டு
கொஞ்சம் இருந்திட்டு;
மாதக்கடைசியாய்
காத்துநின்றது போல்
நாட்களை எண்ணி
மூச்சை நிறுத்தி
வந்தோம்...... இனி
போவோம் என
நாங்கள் ஆகி
பொசிங்கிப்போன
அந்த நாட்களை
நினைவிருக்கிறதா?

எதையும் மறக்கலாம்!

மண்ணில்
ஒவ்வொருதுகளும்
அந்நியர் கால்களில்
நசுங்கிப்போனதும்
எங்கள் கால்களை இழந்து
எங்கள் முகங்களை இழந்து
எங்கள் பரம்பரையை இழந்து
ஆத்மாவை மாத்திரம்
நகத்தின் இடுக்கில்
ஒளித்து
இன்று வரையிருப்பதை
எப்படி மறப்போம்?

குருபரன்



## 'ஒப்பரேஸன் லிபரேஸன்'

ஒரு மாலை நாளை மறந்து
வடமாராட்சி வடலிகளில்
கடந்துகொண்டது
உயர்ந்த பனைகள்
உரசும் ஓசைகள்
''ஷெல்லின் சத்தமும் சேர்ந்த ஒலிகளும்
புல்லின் நுனிகளில் தெறித்து தேய்ந்தன
வல்லை வெளிகளை மெல்ல கடந்த

வாகனங்களில் பள்ளிப்பிள்ளைகள்
ஓ...நேரமும் நாலுமணி
சொல்லி வைத்தாற்போல் சேர்ந்து வந்த
பொம்பரும் ஹெலியும் துள்ளி குதித்தன
சுற்றி வந்தன
வரம்பிலே வயலிலே புளினிகுருவிகள்
புதுபயத்தால் கதறிட
பருத்தித்துறையிலே பலியாட்கள்
பல்லியைபோல ஊரத்தொடங்கினர்
கள்ளியாய் களலாய் முள்ளியில் செம்பியன்பற்று
செருக்கு பேய்கள் தரைதட்டின
சோற்றிலே ஒரு கையை வைத்தமக்கள்
சேற்றிலே ஊரும் . செய்தி அறிவாரோ
''ஷெல்''லும் குண்டுமாய் மாறிமாறி
மாரி பொழிய மாமா மார்கள்
மல்லுக்கு வெளிக்கிட
மக்கள் திகைக்கவில்லை வழமைதானே...
வடிவாய் சமைத்துச்சாப்பிட்டு
பேப்பரும் கையுமாய் பேச்சுவார்த்தை பற்றி
சொல்லி முடிக்கவில்லை...தொடர்ந்து ஆரவாரம்
சந்தியில் சரியான சண்டையாம்
மந்திகள் பல மடிந்தனவாம்
சந்தையில் இரண்டு ஷெல் .. சத்திரத்திலும் விழுந்து
எஞ்சிய சிப்பாய்கள் எடுத்த ஓட்டத்தை
கண்டவர் சொல்கிறார்.. ...
அன்றைய சண்டை அத்துடன் முடிந்துபோக
மக்களும் உறங்கி போயினர்...
விடிவுக்கு முன்னர்...நாலுமணி
வல்லைக்கடலின் வரலாறு காணாத
பில்லி பிசாசுக்கள் மெல்லத்தோணியில்
''ஷெல்''லும் கொண்டு

பொல்லு கத்திகளுடன்
புதைந்து புதைந்து நடந்தன
காகம் குருவிகள் கத்தவில்லை
காலை இன்னும் விரியவில்லை
ஓரம் ஓரமாக ஒரு தொகை
பூட்ஸ் சத்தங்கள்...
மெல்ல மெல்ல கடலோர கழுகுகள்
காலூன்றிக் கொண்டன
எல்லாம் தெரிகின்றது
எழுகின்றன் ஆதவன்
என்ன செய்வோம்......எழுதட்டும் வரலாறு
கையில் கருவிகள்
கடுமையாய் இயங்கின
''ஷெல்''லின் ஓசையும் சிவப்பு சிவப்பாய்
கறுப்பு அங்கிகள் கக்கிய நெருப்புகள்
வல்லை வயலின் வரலாற்றை எரிக்கிறது
கடைசிக் கண்ணிவெடி...கலகலத்து போயிற்று
விழுந்த பிணங்களை விழுங்கிக்கொண்டே
விரைகின்ற வெறியர்படை
கரவை கிழக்கில் வரிசை வரிசையாய்
வல்லூறுகள் பறந்துவர
பிள்ளையார் கோயில் பின்வீதியில் பிசாசுக்கூட்டம்
கல்லையும் முள்ளையும் கருங்கல் மதிலையும்
தூளாக்கி
ஊரின் உள்ளேயும் நுழைந்தன
தொண்டமானாற்றில் தொடங்கிய சண்டையில்
தொண்ணூறுக்கு மேல் மந்திகள் சரியாம்
சொல் ஒன்று கேட்கிறது
தோளில் தொங்கிய பெட்டியில்
பற்றைகள் தோறும் சுட்டுவிழுத்தியும் - அதை
சட்டைசெய்யாமல் தொடரும் பேய்கள்
கையில் கோடலி...கருத்தில் இனவெறி
செய்வதே படுகொலை செய்திகள் படுபிழை



77202

அண்ணுந்தோம்
விண் முழுதும் விஷப்பறவை
வீசின எச்சரிக்கை
''ஊரே அடங்கணுமாம்
உயர்பீட உத்தரவாம்
கோயில் தளங்களிலே
கூடணுமாம் ஒன்ருக''
வல்லூறுகளின் வாசகங்கள்
வடமாராட்சி மக்களை
செய்வது அறியாது செயலற்று திக்கவைக்க
வல்வெட்டிக் கடலிலே நிலைகொண்ட
கல்லையே தூளாக்கும் கனரக பீரங்கிகள்
வல்லையை நோக்கி வாணங்களை எய்திட
பிள்ளைகள் தின்னும் பிரமராச்சதர்கள்
அள்ளியே பொழிந்தனர்
ஷெல்லையும் செப்பு வண்டுகளையும்
ஐயோ...சொல்லவே முடியவில்லை
அழுகுரல் கேட்கிறது
திக்கம் மூலையில் பக்கம் பக்கமாய்
பிளந்த தலைகள்......ஓ......
பிஞ்சுகள் கூட பிரிந்து நசிந்து—...
மந்திகை, மாண்டான் வெளிகளில்
மாந்திரியர் வீடுகள் போல மண்டையோட்டு குவியல்
கண்களை தோண்டி காலின் கீழ்போட்டு
பெண்களை கூட ரத்தம் பீறிடச்செய்து
பிரிக்கேட்டுகள் வீர பிரதாபம் கூவின
பொலிகண்டி வீதியில் மனித பல்மட்டும் சிரித்த
கடவாய் துண்டை கவ்விய நாயொன்று
காலில் ''ஷெல்''பட்டு கிடக்கிறது
வியாபாரி மூலை வீடுகள் தோறும்
விதவைகள் ஓலம் விம்மி......விம்மி குறைகிறது
வதிரியில் வயோதிபர் மடத்திலே
வல்லூறுகளின் வாள் வீச்சில்...சொல்லமுடியாதபடி
வாய்க்காலில் வடிகிறது பச்சை ரத்தம்

பதுங்கு குழியில் பதுங்கிய மனிதர்கள்
பாசிச பாம்புக்கு இரையாகினர்
வெறிக்கத்தியின்
வெற்றிக்களிப்பில்
ஒரு சோடி
கண்மட்டும் இமையின்றி குற்றப்பட்டிருந்தது
கால் விரல்கள் ஆங்காங்கே
துண்டு துண்டாக......
இந்த குவியலில் யாரை பார்ப்போம்
யாரை கேட்போம்
கண்கள் தோண்டப்பட்ட குழிகளிலே
கை எலும்புகள் செருகப்பட்டு......
கடவாய் கிழிக்கப்பட்ட கன்னிகள்......ஓ......
மரணம் மலிவு விற்பனையான
மயான பூமி
காதுகள் அறுக்கப்பட்டு
கம்பிகள் சொருகப்பட்ட
யாழ். மக்களுக்கு ஒரு வானொலி
''யாழ்ப்பாண ஒலிபரப்பு''......
வானிலே வல்லூறுகள் சிறகொலி......
தாளப்பறந்து வந்து
கோரப்பட்ஷிகளின்......வேகா முட்டைகள்......
கொடுமை...... கொடுமை
கோயில்களையும் தூளாக்கிய
கொடுமை......கொடுமை
பயந்தோடி பதுங்கு குழியில்
பயங்கரவாதிகளாக்கப்பட்ட
மழலைகள்......மறக்க மனம் மறுக்கிறது
மண்டாள் வெளிகளில்
மண்ணே வெடி மருந்தாக மணக்கிறது
முலைப்பாலை குடிப்பதற்குள்
மூச்சை நிறுத்திய முப்படைத்தாக்குதல்
தாயை தகப்பனை தமயனை...வீட்டு நாயைக்கூட
இழந்தோம்

கோயிலிலே கூட்டத்தில் உணவின்றி
மயங்கி விழுந்தோம்
பெற்ருேரை காணவில்லை...உற்ருரை காணவில்லை
கட்டிய துணியுடனே கந்தன் கோயிலே
கெதி என்று நடந்தோம்
சுற்றி வளைப்பு...தப்பமுடியளில்லை
சுழன்று சுழன்று ஹெலி சுட்டுக்கொண்டு பறந்தது
பருந்தைப் போல பாரிய விமானம்
விழுந்தது பெற்ருேல் பீப்பாக்குண்டு
பற்றி எறியுது பாடசாலையெல்லாம்
அறிவில் கரைகண்ட அந்தநாள்
மக்களெல்லாம் அழுது அழுது
அகதிகளானேம்
வீடுகள் தகர்க்கப்பட்டன
மீதிகள் எரிக்கப்பட்டன
யுவதிகள் பிடிக்கப்பட்டனர் - இளம்
புத்திமான் தலைகள் அறுக்கப்பட்டனர்
போதும்.... போதும் என்று காதுகளை
பொத்தி தலைகளை கவிழ்த்தோம்
அலருது வானெலி

''வல்லை ஊடாக உடுப்பிட்டி ஈருக
கண்ணிவெடிகளை அகற்றிக்கொண்டு
கறுப்புச்சட்டைகள் முன்னேற்றமாம்''

சொல்லி முடிக்காமல்......
''சரித்திரம் படைக்கும் இப்பணி
ஒப்பிரேசன் லிபரேசன்......''
காற்றே உறைந்து நின்று போனது
கடல் அலைகள் ஓய்ந்து போயின
இழந்த நாட்டை நோக்கி ஒரு நடை
காகம் கத்தவில்லை காய்ந்து உறைந்து போனரத்தக்கறை
கல்லும் முள்ளுமாய் காணிகள் எல்லாம் வெட்டவெளி
காணுமல் போனது மனிதர்கள் மட்டுமல்ல
கல் வீடுகளும் கூடத்தான்
பல்லிழந்த கிழவர்போல

பனையிழந்த வடமாராட்சி
சந்திக்கு சந்தி மனிதனை தின்ற
மந்திகள் குந்திக்கொண்டும் குழலையும்
நீட்டிக்கொண்டு.......
காலை கவனமாக வைத்து கத்தி முனையில் நடை
பாழும் பொறி வெடிகள் பார்த்துப்போவம்
ஆளையே அடையாளம் தெரியாது
ஆற்றையே எலும்பை அணைத்துகொண்டு
அழும் தாய்மார்......
யாரை தேற்றுவது......
சொல்லமுடியாத துர்நாற்றம்......''ஷெல்'' லாலே
எங்கள் உற்றவர்கள் அழுகிகொண்டிருக்கிறார்கள்
அடக்கம் செய்யாத அரை குறை எரிந்த
ஆத்மாக்கள்.....சன பிழக்கமே இல்லாத
பெரும் அழிந்த நகரம்
கல்லொன்றில் அமர்ந்தோம்...ஏ...கடலே
உப்பே வற்றிப்போய் குருதி உறைந்து போனதே
ஆள் காட்டும் முகம்மறைந்த
ஆந்தைகள் அலருகின்றன
யாருடைய பிழைக்கோ கடலம்மா நீ பொறுப்பா?
காலைச் செய்தி......

''பருத்தித்துறை வரைபயங்கரவாதிகள் அழிக்கப்பட்டனர்
எமது பணி விடுதலைப்பணி
ஒப்பிரேசன் லிபரேசன்: முடிவுக்கு வருகிறது
ஊரடங்கும் தளர்த்தப்படும்''

சொன்னார்கள்... பின்னும்
காலை பொறி வெடிக்காய் தாரைவார்த்தோர்
எத்தனை பேர்
காலை கஞ்சிக்காய் ஏங்கி மடிந்தோர்
எத்தனை பேர்
தாயே......அம்மா......முடியாது வரலாறு
முள்கம்பி வேலிக்கப்பால் — ...உன் வரலாறு
......நீயே......தொடர்ந்து கொள்......!

— நாடி —



# "நிரந்தரமாய் நிலைகொள்ளும்"

அன்று அனுமன்
இலங்கையில் இட்டதீ
இன்றும் வடக்கில்
நின்றெறிகிறது!......
எரியும் நெருப்பு!
புரியும் சாகசம்!
தெரியும் எமக்கு!!
கருகும் தேசம்!!
வானம் - மேக
கானம் - எம்
தாகம் - இன்று
சோகம்

ஓ.......
நடந்ததை
நினைத்துப்பார்க்கிறேன்
பச்சைப்பசேலென்ற
அந்த நிலங்கள்
பாலைவனமாக மாறியதை......
தாய் தூக்கி
தாலாட்டிய சேய் - இன்று
தாய் தெரியாது
தடுமாறியதை......
வானமும், பூமியும்
வாழ்த்துப்பா
பாடிய - அந்த
வனப்பு மிக்க
பூமி...... இன்று
சோகமும், துயரமுமாய்
கண்ணீரும், கம்பலையுமாய்
மாறியதை
நினைத்துப்பார்க்கிறேன்

துள்ளித்திரிந்த
பள்ளிமாணவர்கள்.......
அள்ளி அணைத்த - நம்
அன்பு செல்வங்கள்

நாட்டின் நாளைய
வருங்காலத் தூண்கள்......
எங்கே அவர்கள் . ...

காலை வேளைகளில்
சோலையோரங்களில்
கவி பாடிய - அந்த
கவிக்குயில்களும்
துயரமறியாது
கூரை மீது - ஏறி
நின்று
கூக்குரலிட்ட
அந்தக்காலைவேளை
சேவலும் ...
இன்று எங்கே........

பரந்து நிற்கும்
வெளிகளும்
நிறைந்து நிற்கும்
வானமும்.. ...
எரிந்த வயல்களும்
கருகிய கட்டிடங்களும்
சுருண்டுபோன பிணங்களும்
வரண்டு நிற்கும்
பூமியுமாய்
உறங்கிப்போன
வடமராட்சியை
எனக்குள் நானே
எண்ணிப்பார்க்கிறேன்

ஆயிரத்து தொளாயிரத்து
எண்பத்து ஏழாம் ஆண்டு
வனப்பு மிக்க
வைகாசி மாதம்
இருள் மிக்க
இருபத்து ஆறும் தேதி ...
ஒளிமிக்க - பூமி
ஒளியிழந்து போனது

அழகான அந்த
தரணி
அழகற்று
அல்லல் பட்ட
அந்த நாள்

கூலி வாங்கி
வேலி பாயும்
நரிகள் ...
கூலிக்கு
மாரடிக்கும் - அந்த
கூட்டம் .. .. பாவம்
நினைத்தது ஒன்று
நடந்தது வேறு
கண்ணிமைக்கும்
நேரத்தில்
கரைகாணலாம் - என்று
கங்கணம் கட்டி
வந்தவர்கள்......
அந்தோ......
இழப்புகள்......
துயரங்கள் ...
கவலைகள் ....
அவர்களை
அரவணைத்தது.
நம் இரத்தம்
மண்ணில் படிந்து
அவர்கள்
உடலில் வடிந்தது.....

ஆட்சிக்கு வந்து
அதிகாரத்தில் அமர்ந்த
இந்த
சதிகாரக்கும்பல்......
பயங்கர வாதமெனும் .....
பயங்கர பலாத்தை......
வேரோடு அறுத்து.....

வெற்றி கொள்வோம்...
என்று ..
வெறியுடன் கூறியவர்கள்
இறுதியில் வெட்கத்துடன்
பின்வாங்கினர்

முயன்று பார்த்து
முடியாமல் போக
தயங்கி நின்று
தொடங்கி விட்டனர்
லிபறேஷன் ஒபறேஷனை......

புரண்டு வந்த
கொலைப்படைகளை
கண்டு
மிரண்டு ஓடியது
மக்கள் கூட்டம்
அதோ......
அந்த அரக்கர்கள்
அத்து மீறி
அடாவடித்தனம்
செய்தனர்
மரங்கள் சாய்ந்தன
கட்டிடங்கள் கருகின...
சுருதி மீட்டிய
அந்த மண்
குருதியில் தோய்ந்து
நின்றது......

ஏர் பூட்டி
வேளாண்மை செய்த
அந்த
தேர் ஓடிய
பூமி
கூலிப்படைகளின்
பூட்ஸ் கால்களால்......

நாசமாகின... ..
அந்தோ ..
மக்கள் முகங்களை
இழந்தனர்
வாசல்களை இழந்தனர் - தம்
வாசங்களை இழந்தனர்

அநீதி மழையின்
ஒவ்வொ துளியும்
இந்த மக்களின்
குருதித் துளிகளாயின

சோகம் படர்ந்த
தேசப்படத்தில்
கவலைகள்
நிறைந்த – நம்
கனவுகளில்
குருதியில் நனைந்த - நம்
தேசத்தில்
பசுமையே இல்லாமல்
ஆக்கினர்...அந்த
படுபாவிகள்......

கையிழந்தோர் எத்தனை
உற்ற தாய் தந்தை
இழந்தோர் எத்தனை?
தம் சகோதரங்களை
இழந்தோர் எத்தனை?
உடலிழந்தோர் எத்தனை
உயிரிழந்தோர் எத்தனை

அந்த பசுஞ்சோலை
பாலைவனமாக
மாறியதை
நினைத்துப் பார்க்கிறேன்

வீட்டுரோஜாக்கள்
காட்டுரோஜாக்களாக
மாறியதை
நினைத்துப் பார்க்கிறேன்
செங்குருதி - நம்
செம்மண்ணை
முத்தமிட்டதை
நினைத்துப் பார்க்கிறேன்
வானம் வெட்கத்தால்
தன்னை திரையிட்டது
தென்றல் காற்று
கோபத்தால்
புயலாகியது......
தெளிந்த அந்த
நீலக்கடல்
ஆவேசத்தில்
அலைபுரண்டு
கரைபிரண்டது
ஏன்?......
கூலிக்கு மாரடிக்கும்
அந்த
கும்மளப் படைகள்
செய்த
அடாவடித்தனம் தான்

தமிழன் தன்
அகராதியிலிருந்து
விடுதலை எனும்
பதத்தை
விடுவிக்கச்
சொல்கிறான்...
நாளும் இங்கே
நாம் மடிகிறோம்...
பாவம் நாங்கள்
பரிதவிக்கின்றோம்...


அந்த வடமராட்சி
இந்த அரசாட்சி
நினைத்துப் பார்க்கவே
நிலை குலைகின்றோம்.

கல்லறைகளிலும்
சமாதிகளிலும் - எங்கள்
அமைவிடங்களை
அமைத்து
வாழ்கிறோம்...
காலையில்
எழுந்து நம்
வீரர்களின் சிலைக்கு
விளக்கு ஏற்றி
வைக்கின்றோம்...

எழுந்து நின்று
உயர்த்திய கரத்தில்
உரத்த குரலில்
கூறுகிறோம்...
" இனியும் ஒரு
லிபரேஷன்
ஒபரேஷன் - ஆயின்
நம் உடலை
பூமி தாங்காது...
பூமிக்கு நாங்கள்
சுமையாவோம்...

எம் கரங்களின்
விரல்களில்
துப்பாக்கிகள்
நிரந்தரமாக
நிலை கொண்டு விடும் ...

இரா. ஜனகன்



# "நினைவுச் சிதறல்கள்"

மாலை வேளையில்
சோலைக் குயில்கள்,
சோகம் இன்றியே
கானம் பாடின
அன்றய பயங்கரத்தை
நன்றே உணர்த்த
ஆந்தை ஒன்று
அலறித் துலைத்தது
எந்த ஓசைக்கும் - நான்
அலட்டிக்கொள்ளேல்;

அடுப்பில் தண்ணி
கொதித்து குமுறியது-எங்கள்
நெஞ்சுகள் போல
கடல் வல்யச்சட்டத்தால்
வளையம் போட்டு
திண்ணையில் படுத்த
கணவனைப் பார்க்க

கண்கள் கலங்கின
இன்னும் எத்தனை நாளைக்கோ!
நினைந்த படியே
குழைத்த மாவை
அடுப்பில் வைத்தன்
முற்றத்து மரத்தின் கீழ்
முத்துவும் நந்துவும்
சத்தம் போட்டு
விளையாட்டில் கலந்தனர்
மூத்தவன் தனு
படிக்கப்போயிருந்தான்
காத்துப்பட்டும்
அசையாது......
முறுகிக் கிடந்தது
வேலியில் வலை
தண்ணி பட்டும்
எவளவு நாட்கள்
வயிற்றை நனைக்க
வலையை நனைக்கனும்
சொன்னபடி தொழிலுக்கு
போக நினைச்சவரை
மறிச்சுப் போட்டடன்
வயிற்றுக்குள் இருந்த
அடுத்த சீவனும்
பசிக்குது என்று
வாயால் கேட்பதுபோல்
ஒரு பிரமை......
குடுக்கிற கடவுள்
கூரையைப் பிச்சு
குடுக்குமாம்......
மூன்று போதாதென்று
நாலாவதும் ஒன்று
நாலுமாதச் சீவனது
நானும் என்னசெய்ய

நினைவலைகளைச் சிதறடிக்க
நீலவானில்......
ஏதோ சத்தம்
குட்டிக்குப் மக்கத்தால
எட்டின் பார்த்தன்
எமக்கு மட்டுமல்ல
பிரச்சினை......
பொம்மர்களிற்கும் தான்
அதுதான்......
ஊர்வலம் போகின போல
எண்ணிய படியே
தண்ணிப் பானையால
புட்டை இறக்கிறன்
கட்டை வேலிப்பக்கம்
பெரிய சத்தம்
கல்லுப் பறியல் போல
விமானச் சத்தம்
அருகில் பிளக்க
அடுப்படியால
வெளிய வாறன்
ஒரு கணம்தான்
பக்கத்து வளவில்
குண்டொன்று விழ
குழந்தைகளைத் தூக்க
இவர் ஓடுரார்
என்ன கொடுமை
அடுத்த குண்டு
இவர்கள் அருகில்
சிறு அசைவுடன்
அனைவரும் அடங்கினர்
கண்ணுக்கு முன்னால
கணவனும் பிள்ளைகளும்......
கத்தக்கூட
ஏண்ணால முடியல
இதயம் ஏனோ

இயங்க மறுப்பது போல
கண்கள் ஏதோ
களருவது போல சுழல
கால்கள் நிற்க மறுக்க
தொண்டை வறல
தொப்பென்று விழுந்தன்
தொடர்ந்தவை ஏதும்
எனக்குத் தெரியாது

சூடு போல......
ஏதோ பரவ
பாடு எண்ணென்று
பாக்க எழுந்தன்
வீடு எல்லோ
பற்றி எரிந்தது
ஐயோ! ஐயோ!
எழுந்து ஓடுறன்
முற்றத்திற்கு
குப்புறக் கிடந்த
கணவனின் உடலை
கட்டி அழுதன்
தொட்டு வணங்கினன்
பட்டு விரல்களால்
முத்துவின் இடதுமணிக்கட்டை
பிடித்தபடியே......
உறங்கிப்போன
நந்துவின் முகத்தை
கையில் ஏந்தினன்
என்ன பயங்கரம்!
கையுடன் தலை
வந்தே விட்டது
என்னுடல் பதற
மீண்டும் உடலுடன்
ஒட்டவே வைத்தன்

PUBLIC LIBRARY
JAFFNA.

இடக்கரம் இழந்து
இருதயம் பிளந்து
இறந்து கிடந்த
முத்துவின் முகத்தை
எப்படி மறக்க!
எப்படி நினைக்க
எனக்கும் ஏதோ
பிடித்திருக்க வேணும்
எழுந்து நின்று
வீட்டைப் பார்த்தன்
மாலையும் கழுத்துமாய்
இவரின் கையைப்பிடித்தபடி
சின்னக் குடிலுக்குள்
நுழைந்த நினைவுகள்
காயப் போட்ட
கறுத்தப் பாவாடையின்
எரிந்த மீதிகள்
புகைந்து கொண்டிருந்தன
விசரி போல......
தலையில் அடிக்க
படிக்கப் போன
தனுவின் ஞாபகம்
ஒரு கணம்தான்
ஓடத் தொடங்கினான்
குஞ்சம்மா டீச்சரின்
வீடு நோக்கி
ராணுவ வேட்டுக்கள்
தொடர்ந்து கேட்டன
''தரையாலேம் வாறாங்கள்''
சொல்லியபடியே
சனமும் ஓடியது
கொல்லவென்றே
செல்லுகள் வந்து
செவிடு படுத்தின


வழிகள் எங்கும்......!
இரத்தச் சிதறல்கள்!
சதைப் பிண்டங்கள்
வீடுகள் பல
சுவாலை வீசின
மரங்கள் சில
விழுந்து கிடந்தன
விமான இரைச்சல்கள்!
குண்டுச் சத்தங்கள்
தொடர்ந்து ஓடுறன்......

இத்தனைக்கும்
வயிற்றுச் சீவனும்
கூடவே வந்தது
குஞ்சம்மா டீச்சரின்
குச்சுக்கை திரும்பிறன்
குறுக்க ஒரு
குமரின் சடலம்
கொஞ்சம் தள்ளி......
வாய் பிளந்தபடி
வாளறுந்து கிடந்தது
நாய்க்குட்டி ஒன்று
எட்டிக் கடந்து
அங்கால பார்த்தன்
எல்லாம் நிசப்தம்
தனு...! தனு...!
பதிலை இல்லை
திரும்பி நடக்கிறன்
இல்லை......இல்லை......
போதையுண்ட போதையாய்
ஓடுறன்......நடக்கிறன்
எங்க போறது......?
கால்கள் மறுக்க
வயிரவர் இருக்கிற
ஆலமரத்தடியில்

அமர்ந்தே விட்டன்
தொட்ட கணவன்
பெற்ற பிள்ளைகள்
யாருமே இல்லையா......?
நினைக்க நினைக்க
தலைக்கை வெடிக்குது
கத்திக் கத்தி
தலையில அடிக்கிறன்
இப்படி இப்படி
எத்தனை நாட்கள்
எண்ணக்கூட
என்னால் முடியல

எனக்கும் ஏதோ
விசாரக்கும்
இல்லை......இல்லை......
மனசுக்க......
பெரிய கசங்கல்
இல்லாட்டி......
இப்படி எல்லாம்
நடந்ததைச் சொல்லுவனோ?
வயிற்றுச் சீவனை
தடவி......
ஏதோ நம்பிக்கையுடன்
விரிந்த தலையும்
கிழிஞ்ச சீலையுமாய்
கலைந்து கிடக்கிறன்
காலைக் கடியெறும்புகள்
பதம் பார்க்கின்றன......
இதய வெடிப்பின்
முன்னே......
இந்த எறும்புக்கடிகள்
எங்கனம்......

கொடுமைகளுக்குள்ளாக்கப்பட்ட அன்னைக்காக
சடாவத்னன்



# "பாசக் கயிற்றுப் பந்தம்"

எனது
சித்திரக் கவிதைகளில்
சிருஸ்டிப்பு இரகசியம்
சிறகுச் சொற்கள் தான்
அதுவும்
நெருப்புக் கோழியின்
நீண்ட சிறகல்ல
சிட்டுக் குருவியின்
சின்னஞ் சிறிய
சிறகுகளே

சொந்த நாட்டிலேயே
அகதிகளாக்கப்பட்ட
சோகத்தை கூறுகிறோம்
அகதிகள் ஆகி
அவஸ்தைப்பட்ட
அல்லல்பட்ட
கதைகளைக் கூறுகிறோம்

புலன்கள் அதிர
மின்னி முழங்கிப்
பொழிந்த பெருமழைக்குப்
பின்னால்
காத்திருந்து மெல்ல எழுமே
ஓர் பேர் மௌனப்பெருக்கு
அடைமழைக்குப் பின்
முளைக்கும் கதிர்விரிகாலையில்
வழியுமே
ஓர் எல்லையற்ற
பேரமைதி...
அதே போல்
குண்டுகளின் சத்தங்களும்
துப்பாக்கி வெடி ஓசைகளும்
பொம்மர்களின் பேரிரைச்சலும்
ஹெலிகலின் ஆக்ரோசமும்
இராணுவத்தின் அடாவடியும்
ஒருங்கே முழங்கிய பின்
இன்று ஓர்
மயான அமைதி
ஆமாம்.....
நிரந்தரமா?
நிரந்தரமற்றதா
என ஏங்க வைக்கும்
மயான அமைதி ..

இடை இடையே சிறு சிறு
சத்தங்கள்
இருப்பினும்
மனிதர்களின்
இல்லை......இல்லை......
தமிழர்களின் அதுவும்
ஈழத் தமிழர்களின்
மனதிலே
ஓர் மயான அமைதி
மனித(ர்) மயான(த்தில்) அமைதி?...

பிஞ்சுக் கைகாட்டி
கொஞ்சிச் சிரிக்கும்
சின்னக் குழந்தை என்ன
கண்களால் கதைபேசி
கதைகள் பல கூறிவிடும்
கன்னியர் கூட்டமென்ன
வாழ்க்கையை வாழ எண்ணி
காலத்துடன் போராடும்
வாலிபர் கூட்டமென்ன
பேரப் பிள்ளையுடன்
பேசி மகிழ எண்ணும்
முதியவர் கூட்டமென்ன......
அப்பாவி மக்களை
அழித்தே தீருவேன் என
கங்கணம் கட்டி நிற்கும்
அரக்கர்களின்
துப்பாக்கி முன்;
அன்பு என்ன?
பாசம் என்ன?
இயந்திர மனிதருக்கும்
இரும்புக் குழாய்க்கும்
இதயமுண்டா?...
ஈரமுண்டா?...

கர்ப்பிணிகள்
காயப்பட்டவர்கள்
வயோதிபர்கள்
வலது குறைந்தோர்கள்
எல்லோரும்
சாதி, மத பேதமின்றி
ஒன்று கூடி
ஓரிடத்தில் தங்கி
ஒன்ருகப் படுத்துறங்கி;
கொண்டும் கொடுத்தும்
வாழ்ந்த
ஓரிடம்......
அதுவே அகதிமுகாம்— —
பள்ளி ஆசிரியென்ன
பேராசிரியென்ன
வைத்திய னென்ன
தொழிலாயாயிருந்தாலென்ன
எல்லோரும்
''சோசலிச''ப் பாணியிலே
கூடி இருந்து;
ஒரே உணவையுண்டு
ஓரிடத்தில் வாழவைத்த
பெருமையும்
அகதி முகாம்களுக்கே

பாடசாலைகள் முன்பு
வகுப்பறைகளாக மட்டுமே
பிரிபட்டுரிந்தன
இன்று
அந்த வகுப்பறைகளே
குடித்தனம் நடத்தும்
குடியிருப்பளாகி
மலையகத்தின்
'லயம்'களாக
பரிணமித்துவிட்டன... ..

பச்சை அரிசியை
பதமாக வேகவைத்து
உப்பிட்டு கஞ்சியாக்கி
உப்பு கஞ்சியாலேயே
உயிர் பிழைக்க
உணவாகும்
பரிதாப நிலை......

வீதியில்
எவர் வரினும்
அவர் எதிரே
''சன்னம்'' வரும்...
முகாமிலே வதைபட்டு
அவஸ்தைகள்
பொறுக்காது
எது நடப்பினும்
ஏற்றிடுவோம்
வீடு சென்றிடுவோம்
என வீட்டுக்குத் திரும்பிய
பலர்...பிணமாகி
நாய் தின்ன நாயின்றிய
நிலையில்
தெருவோரம்
சிதைந்தவிந்த
பல கதைகளை
நம் தேசத்தின் தெருக்கள்
கூறும்......
''அகதிமுகாம்'' என
வெள்ளை வேட்டியிலே
எழுதி
கம்பியிலே சுற்றி
காற்றிலே பறக்கவிடினும்
வந்த இராணுவம்

அகதிகளிடம்
இருந்த சில உடமைகளையும்
எடுத்துக்கொண்டு
வரிசையில் நிற்கவைத்து
துப்பாக்கியை இயக்கினராம்...
இரத்தப் பெருக்கில்
ஒவ் வொன்ருய்
சாய்ந்து விழ
சன்னம் முடியமட்டும்
மக்கள்
"சன்னதம்" ஆடிய
நிலையும் நடந்ததுண்டு....

வானொலியில்
"லங்காபுவத்" சொல்லிடும்
அறிவுரைகள் பலப்பல......
கோயில்களுக்குப் போய்
விடுங்கள்
கொடி ஒன்றைக்
கட்டுங்கள்...... என
பின்னர்
கோபுரத்தைக் கண்டதும்
அந்த பொம்மர்களின்
குறிவைத்து தாக்கிவிடும்.........
குண்டுமாரி பொழிந்துவிடும்.........
அல்வாய் முத்துமாரியம்மனும்
வல்லைச் சிவனும்
சுட்டிபுரத்து அம்மாளுக்கும்
விதிவிலக்கா?......
இந்த நவீன யம
அரக்கனின்
பாசக்கயிற்றுக்கு......

- க யோ. கிரிதரன் -



# "விடிவு நட்சத்திரம்"

உங்கள் சோகங்களை
'தினக்' கழுகுகள் தின்று
இன்றுடன்
ஒரு வருடமாமே!
ஓ!
இன்றும் எங்களுக்குள்
நேற்றென்ற ஞாபகம்!

ஒரு வருடத்திற்கு முன்னால்
ஓர் நாள்
ஓ! வடமராட்சியே
உறங்கி விட்டாயாமே!
இல்லை ........
உன் உணர்வுகள்

எங்களுக்குள் இதோ
விசுபரூபமாய்
விழித்துக் கொண்டது!

தேற்றைய தழும்புகளாக
நீங்காத வடுக்களாக
ஓ!
அந்த ஓலங்கள்
இன்னும் உருமாறவில்லை!

உதிர வெறிகொண்ட
ஓநாய்கள்—
எங்கள் வடமராட்சியில்
தர்மிஷ்டத்தை பரப்ப
எத்தனித்த போது.........
குமுறல்களின் குரல்களில்
அது சுடுகாடாகியதே!

"ஒப்பரேசன் லிபரேசன்"
ஓ!
வெறியர்களின் சத்திரசிகிச்சைக்கு
அதுதான் பெயரா?
கிழிக்கப்பட்ட மார்புகள்
துளைக்கப்பட்ட உடல்கள்
வெட்டப்பட்ட அங்கங்கள்
ஊனமாக்கி
மக்களை ஊமையாக்குவதுதான்
ஒப்பறேசனோ?

ஜனநாயகப் போர்வைக்குள்
சர்வாதிகார துப்பாக்கிகள்
அந்த சர்வாதிகாரத்தினுல்
வடமராட்சியில் .....
பிடுங்கப்பட்ட
நாக்குகளே
தொடுக்கப்பட்ட தோரணங்கள்!



77202

வெட்டப்பட்ட
கைகளே
அடுப்பின் விறகுகள்!
சொட்டிய இரத்தமே
சுடுகாட்டில்
பூத்து போன திருநீறு!

கற்புக்கரசிகள்
கண்ணகி சீதை...
வெறியர்கள்
எங்கள் சோதரிகளின்
கற்பு மலர்களை
கருகடித்தனரே......
தமிழர் வழியில் இனி
கற்புக்கரசிகள்
தோன்றக்கூடாதென்றா?

'உடுக்கை இழந்தவன் போல
புத்தகத்தை
படிப்பை இழந்து......
ஓ!
எதிர்கால சமுதாயத்தை.......
இந்த மாணவர்களை
எத்தனை இடங்களில்
ஒடுக்க முடியும்?

தாயைப் பிரிந்த சேய்.........
சேயைப் பிரிந்த தாய்.........
ஓ!
தமிழராய் பிறந்தால்
தாயும் சேயும்
கூடிவாழ்வது கூட
குற்றமென்றது
உனது தீர்ப்போ?

எங்கள் வீடுகளை
நிரப்பியிருந்த பொருட்கள்
உனது வீடுகளை
நிரப்பிக்கொண்டதே!
ஓ!
இப்போது எங்கள் வீடு
சோக சிலுவைகளால்
நிரம்பிக் கொண்டது!
குடியிருக்கத்தானே
குடிகளை அமைத்தோம்
குண்டர்களே ஏன்
குண்டு வைத்து தகர்த்தீர்?
ஓ!
எங்களைப்பார்த்து
உன் நெஞ்சில்
தீ விட்டது வெறியா?

வளரும்
பருவத்திற்கென்று
நாங்கள்
நாட்டிய குழந்தைகளை
முரடர்களே
ஏன்
வெட்டி முறித்தீர்
அவர்களும் உரிமைக்காக
போராட ஆயத்தமாவார்கள் என்றா?

இன்னும்
எத்தனை வருட காலத்திற்கு
எங்களை
நசிப்பதாக உத்தேசம்?
இதோ
எங்களது பிரகடனம்
தொடர்ந்தும் உரிமைக்காக
போராடுவோம்!

அடிமைகளுக்கு
பகல்களும் அமாவாசைகளே!
இருட்டை ஒழிக்க
புறப்பட்டு
எம்மக்களே
நீங்கள் இழந்த வாழ்வு
எங்களை
உலுப்பி விட்டது!


புரட்சி சிவப்பாவதற்கு
நீங்கள்
இரத்த தானம் செய்த
அந்த நாளெங்கே?
ஓடி மறைந்து விட்டதா?
இல்லை
இன்றும் எங்களுக்குள்
பூகம்பமாய் இருக்கின்றது!

நாங்கள் என்ன
நன்றி கெட்டவர்களா?
இல்லை.........
சுதந்திர மனிதன்
பதிக்கும் சுவடுகள்
மரணித்த வடமராட்சியருக்கு
எங்கள் செய்கடன்.........
இதோ!
உங்களுக்கு
நன்றிக் கடன் செலுத்த
தயாராகி விட்டோம்!
நீங்கள் சிந்திய
சிவப்பு இரத்தம்
அபாயத்தின் அறிகுறி அல்ல!
விடிவு நட்சத்திரத்தின் மேல்
விழுந்த நிறம்!

தலவாக்கொல்லை சௌந்தராஜன்

PUBLIC LIBRARY
JAFFNA

ாடுமைகள்
ந்த எங்கள்
ணின் நிகழ்வுகளை
வுகூரும் எட்டு
து வளருங்கவிஞர்களின்
தைத் தொகுப்பு''



GENERAL UNION OF YOUTH AND STUDENTS
GUYS

வெளியீடு:

ாணவர் இளைஞர் பொது மன்றம்